விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 22 வெள்ளிக்கிழமை (08.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293

## யாழ்.பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழா




யாழ்.பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் 2ஆவது பகுதி நேற்று வியாழக்கிழமை நிகழ்நிலையில் ஆரம்பமாகி நடைபெற்றபோது...

## 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவீர்களா?



### சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி

(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய்க்குதங்கள் விடயத்தில் அரசாங்கம் தப்பித்துக்கொள்ள இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை சாட்டாக பயன்படுத்துவதைப் போலவே இலங்கை - இந்திய

15

### 2021ஆம் ஆண்டுக்கான

## புலமைப்பரிசில், உயர்தர பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த உயர்தர பரீட்சைகள் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக

15

### பால்மா இருப்பை

## திங்கள் முதல் விநியோகிக்க ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும்திங்கட்கிழமை முதல்

15

### நாட்டில் மேலும்

## 44 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 44 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில்

15

### பின்னடைவுகளிலிருந்து புதியதொரு ஆரம்பத்துக்கு

# அனைத்து தடையையும் தகர்த்தெறிய தயார்!



### அரச அதிபர்களுடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி

(கொழும்பு)

**பின்னடைவுகளிலிருந்து புதியதொரு ஆரம்பத்துக்கு அனைத்து தடைகளையும் தகர்த்தெறிய நான் தயாராக உள்ளேன் என மாவட்ட அரச அதிபர்களுடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மாவட்ட அரச அதிபர்களுடன் நேற்று முற்பகல் இடம்பெற்ற வீடியோ தொழில்நுட்பத்துடனான கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு

15

### கொரோனா

## +772

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 772 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்

15

## வடக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநர் நியமனம்?

(கொழும்பு)

வடக்கு மாகாணத்திற்கு புதிய ஆளுநர் நியமனம் இடம்பெற்றிருப்பதாக தெரியவந்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாட்டாளர்களில் ஒருவரான ஜீவன் தியாகராஜா என்பவரே நியமிக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

குறித்த தீர்மானம் நேற்று மேற்கொள்

15

- பால்மா
- கோதுமை மா
- சமையல் எரிவாயு
- சீமெந்து

## கட்டுப்பாட்டு விலை நீக்கம்

(கொழும்பு)

பால்மா, கோதுமை மா, சமையல் எரிவாயு மற்றும் சீமெந்து ஆகியவற்றுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும்

15

### 19 வயது இளம் பெண் உட்பட

## யாழில் கொரோனாவால் இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையில்நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர்

15

### கொரோனாவால்

## வவுனியாவில் ஒருவர் மரணம்

### 24 பேருக்கு தொற்று

(வவுனியா)

வவுனியாவில் 24 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், ஒருவர் மரணமடைந்துள்ளதாக

15

## மக்களின் செயற்பாடு மிக மோசமாக உள்ளது

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள்

(கொழும்பு)

மக்களின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி அடைந்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் மக்கள் சுகாதார வழிகாட்டல்

15

# பண்டோராவில் மேலும் 65 இலங்கையர்களின் பெயர்

(கொழும்பு)

பண்டோரா ஆவணங்கள் மூலம் பணத்தை மறைத்து வைத்துள்ள மேலும் பலரின் பெயர்கள் வெளியிடப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், கிடைக்கும் தகவல்களுக்கு அமைய சுமார் 65 இலங்கையர்களின் பெயர்கள் வெளியிடப்படவுள்ளன.

தற்போது வெளியிடப்பட்டுள்ள ஆவணங்களில் குறிப்பிட்ட காலவரையறை குறிப்பிடப்படவில்லை.

இதனால், எந்த காலத்தில் இந்த பணம் வெளிநாடுகளில் பதுக்கப்பட்டது என்பதை கூற முடியாது எனவும் ராஜித கூறியுள்ளார்.

ரணசிங்க பிரேமதாச மற்றும் சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகிய ஜனாதிபதிகளின் காலத்தில் நிருபமா ராஜபக்ச மற்றும் அவரது கணவர் திருக்குமார் நடேசன் ஆகியோர் வெளிநாடுகளில் பணத்தை வைப்புச் செய்துள்ளதாக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச கூறியுள்ளமை குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள ராஜித சேனாரத்ன,

வர்த்தகர் ஒருவர் எங்காவது பணத்தை வைப்புச் செய்தால், அதற்கு எப்படி நாட்டின் ஜனாதிபதி பொறுப்புக் கூற முடியும் எனத் தெரிவித்துள்ளார். (ம-03)


**அச்சக வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு முன் அனுபவம் உள்ள
கோட் மிசின் மையின்ரர்
கணினி ரைப்பிங்
பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். (8382)
**077 396 5214**

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (8384)
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி**

**முகவர் தேவை**

எமது வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு "முகவராக" செயற்படுவதற்கு விருப்பமான அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரபடுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் நிபந்தனைகளையும் விண்ணப் படிவத்தையும் "வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி. பிப்பிலிச் சந்தி. மானிப்பாய்" எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

- விண்ணப்ப முடிவுத் திகதி 22.10.2021 முற்பகல் 10.00 மணி வரை.
- முகவர் நியமனம் தொடர்பில் நெறியாளர் குழுவின் தீர்ப்பே முடிவானதாகும்.

தலைவர்,
வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின்
கொத்தணி, மானிப்பாய்.

08.10.2021 (C 2773)


**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

மண்ணகம் 02.10.1930 — விண்ணகம் 08.09.2021



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் தங்கம்மா கந்தையா** (தங்கேஸ்வரி)

[ முன்னாள் ஆசிரியை - யா / இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ]

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (08.10.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்

(8172)

**இந்து பௌத்த கலாசார பேரவையின் இரண்டாம் மொழி கற்கை நெறி ஆரம்பம்**

வடக்கு மாகாணத்தில் இந்து பௌத்த கலாசார பேரவையினால் நடத்தப்பட்டு வருகின்ற 2ஆம் மொழி கற்கை நெறியில் சிங்கள மொழிக்கான ஆசிரியர் பயிற்சி தொடர்ந்து வழங்கப்படவுள்ளது. அதற்காக புதிய மாணவர்கள் இப்போது பதிவு செய்யப்படுகின்றார்கள்.

ஏற்கனவே 2019, 2020ஆம் ஆண்டுகளில் கல்வி கற்ற மாணவ ஆசிரியர்கள் ஏறத்தாழ 100 பேர் ஆசிரிய தொழில் தகைமையினைப் பெற்றுத் தற்பொழுது அவர்களுக்கான ஆசிரிய பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இம் மாணவர்களுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சு முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இடையில் கொவிட்-19 காலப்பகுதியில் மாணவர்களுக்கு ஏற்பட்ட தடங்கல்களுக்கு நாம் மனம் வருந்துகின்றோம்.

எனவே வேலை வாய்ப்பினை தேடுகின்ற இளைஞர், யுவதிகள் மற்றும் உயர்தர பரீட்சை எழுதி முடித்தவர்கள் அனைவரும் இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ளமுடியும். இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்களுக்கான விசேட கற்கைநெறி முதலில் 120 மணித்தியாலங்கள் இலவசமாக கற்பிக்கப்பட்டு அதற்கான தகைமைச் சான்றிதழ் வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து 600 மணித்தியாலங்கள் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி வழங்கப்படும். இவ் வேலைத்திட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள 05 மாவட்டங்களிலுள்ள மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

அனைத்து விண்ணப்பங்களும் October 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் நேரடியாக அல்லது தபால் மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 100 பேர் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

பொதுச் செயலாளர்,
இந்து பௌத்த கலாசார பேரவை
இல. 09, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**076 028 2693** (C- 2776)

# மரண அறிவித்தல்

## கனகம்மா செல்வராசா

அன்னை மடியில் : 08.10.1942 — இறைவன் அடியில் : 06.10.2021



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா செல்வராசா நேற்று முன்தினம் *(06.10.2021)* புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தயானந்தனின் பாசமிகு தாயாரும் நகுலேஸ்வரியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற சிவலிங்கம், காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற அழகம்மா மற்றும் தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் கம்சாரினி, சாகித்தியன், யெகதாரணி, கம்சவர்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் *(06.10.2021)* புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

077 175 2611

தகவல்:-
வ. செல்வராசா (கணவர்)

# யாழ்.பல்கலைக்கழக 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா






(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நிகழ்நிலையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழகத்தின் யூரியூப் மற்றும் முகப்புத்தகப் பக்கங்கங்களினூடாக நேரலையில் ஒளிபரப்பப்பட்டன.

மேற்படி பட்டமளிப்பு விழாவில் 1700 பேரின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-18-33)

# கொவிட் தொற்றின் தீவிர தன்மை மீண்டும் ஏற்படாதவாறு செயற்பட வேண்டும்

## பொதுமக்களுக்கு சுகாதார தரப்பு அறிவுறுத்து



(கொழும்பு)

நாட்டில் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்பட்டு வெளிநாடுகளிலிருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்யக் கூடியளவிற்கு கொவிட் தொற்றின் தீவிர நிலைமையை இலங்கை எதிர்கொண்டுள்ளது.

எனவே மீண்டும் அது போன்றதொரு நிலைமை ஏற்படாதவாறு அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் பரவல் காரணமாக 3 சந்தர்ப்பங்களிலும் சிறந்த பாடத்தை கற்றுக் கொண்டுள்ளோம்.

எனவே இனியாவது சகலரும் சிந்தித்து செயற்பட வேண்டும். நாட்டில் ஒட்சிசன் நெருக்கடி ஏற்பட்டு, வெளிநாடுகளிலிருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை கூட ஏற்பட்டது.

இவ்வாறான பாரதூரமான பாதிப்புக்கள் மீண்டும் ஏற்படாத வகையில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி செயற்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும். ஆர்ப்பாட்டங்கள் ஊடாக கொவிட் அலை ஏற்படும் என்று நாம் கருதவில்லை.

எனினும் தொழிற்சங்க தலைவர்கள் பொறுப்புணர்வு மிக்கவர்கள் என்ற அடிப்படை யில் மீண்டுமொருமுறை தொற்று ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும் என்று கோருகின்றோம் எனத் தெரிவித்தார். (4-5)

## சா/த பரீட்சை முடிவுகளின் மீள் பரிசீலனைக்கான காலக்கெடு அறிவிப்பு

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகளின் மீள் பரிசீலனைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முடிவுகள் தொடர்பான மறுபரிசீலனை விண்ணப்பங்களை பரீட்சார்த்திகள் எதிர்வரும் ஒக்டோபர் 25 வரை சமர்ப்பிக்கலாம்.

பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://w.w.w. doenets.lk என்ற முகவரியில் பிரவேசித்து விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தலாம் என பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பூஜித அறிவித்துள்ளார்.

2020 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் கடந்த செப்டெம்பர் 23 ஆம் திகதி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(4-5)

## ஜனாதிபதியிடம் இருந்து சஜித்துக்கு தொலைபேசி அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே நேற்று முன்தினம் தொலைபேசி வழி உரையாடல் ஒன்று இடம்பெற்றது.

திடீரென சஜித்திற்கு தொலைபேசி மூலம் அழைப்பு எடுத்துள்ள கோட்டாபய, கரிமப் பசளை விவகாரம் பற்றிய பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

எனினும் இதுபற்றி கட்சியின் உயர் பீடத்துடன் பேச்சு நடத்தி மீண்டும் சந்திப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளதாக ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் மேற்கோள்காட்டிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-5)

# இணுவில் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து கோடரியை காட்டி பயமுறுத்தி , வீட்டில் இருந்தவர்களிடம் நகைகளை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இணுவில் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் கடந்த 3 ஆம் திகதி அதிகாலை மூன்று பேர் கொண்ட கொள்ளை கும்பல் ஒன்று அத்துமீறி வீட்டினுள் நுழைந்து, வீட்டில் இருந்தவர்களுக்கு கோடரியை காட்டி பயமுறுத்தி 21 பவுண் நகைகளை கொள்ளையிட்டு தப்பி சென்று இருந்தனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், தாவடி பகுதியை சேர்ந்த 26 வயதான நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபரிடம் இருந்து ஒரு தொகை நகைகள் மீட்கப்பட்டன.

குறித்த சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக சுன்னாக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (5-7-33)

# வல்லரசுகளின் ஏல விற்பனை நிலையமாக நாடு மாறுகிறது

## எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பலம்வாய்ந்த சர்வதேச வல்லரசுகளின் “ஏல விற்பனை நிலையமாக” எமது நாடு மாற்றப்பட்டிருக்கின்றது. இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் இலங்கை மின்சாரசபை, துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத்தாபனம் உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்புக்கள் சார்ந்த தொழிற்சங்கங்களும் வாராந்தம் ஒன்றுகூடி பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான மத்திய நிலையமாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டின் பலதரப்பட்ட துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அங்கு கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ மேலும் கூறியதாவது,

இன்றளவில் மிகப்பலம்வாய்ந்த சர்வதேச நாடுகளின் “ஏல விற்பனை நிலையமாக” எமது நாடு மாறியிருக்கின்றது. நாட்டின் தேசிய மற்றும் பொருளாதார முக்கியத்துவம்வாய்ந்த சொத்துக்கள் அனைத்தையும் அரசாங்கம் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து வருகின்றது.

சர்வதேச நாடுகளுடனான அரசாங்கத்தின் இரகசிய ஒப்பந்தங்களால், தற்போது இலங்கை பாரிய அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்திருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் வாராந்தம் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து தொழிற்சங்கப் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கான மத்திய நிலையமாக இந்த அலுவலகம் திகழ வேண்டும்.

அதுமாத்திரமன்றி எதிர்வருங்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைத்ததன் பின்னர் நாட்டின் தேசிய மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சொத்துக்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடியதன் பின்னரே இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் என்று எழுத்துமூலம் உறுதியளிக்கின்றேன் என்று குறிப்பிட்டார். (4-5)

# பெங்களூரை வீழ்த்தியது ஐதராபாத்



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 52 ஆவது லீக் போட்டியில், சன்ரைசஸ் ஐதராபாத் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், சன்ரைசஸ் ஐதராபாத் அணியும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசஸ் ஐதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 141 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜேஸன் ரோய் 44 ஓட்டங்களையும் கேன் வில்லியம்சன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் பந்துவீச்சில், ஹர்சல் பட்டேல் 3 விக்கெட்டுகளையும் கிறிஸ்டியன் 2 விக்கெட்டுகளையும் ஜோர்ஜ் கார்டன் மற்றும் சஹால் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 142 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் ஐதராபாத் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, தேவ்தத் படிக்கல் 41 ஓட்டங்களையும் க்ளென் மேக்ஸ்வெல் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஐதராபாத் அணியின் பந்துவீச்சில், புவனேஸ்வர் குமார், ஜேஸன் ஹோல்டர், சித்தார்த் கவுல், உம்ரான் மாலிக் மற்றும் ரஷித்கான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஐதராபாத் அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் தெரிவு செய்யப்பட்டார். (4-5)



# நான்காவது இடத்தில் கொல்கத்தாவா? மும்பையா?

## இன்று முடிவு




ஐ.பி.எல். 2021 தொடரின் இறுதிக் கட்டம் நெருங்கி விட்டது. இன்னும் குரூப் ஸ்டேஜில் 2 போட்டிகள் உள்ளன. இன்று 8 ஆம் திகதி மிக முக்கியமான போட்டியான சன்ரைசர்ஸ்-மும்பை இந்தியன்ஸ் போட்டியும், அதே நேரத்தில் ஆர்சிபி. டெல்லி கப்பிடல்ஸ் அணிகளும் மோதுகின்றன. 10 ஆம் திகதி பிளே ஓப் முதல் குவாலிஃபையர் தொடங்குகிறது, டெல்லி, சிஎஸ்கே, பெங்களூர் அணிகள் ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதி பெற்றுவிட்டன. 4 ஆம் இடத்துக்கான மோதலில் கொல்கத்தா, மும்பை அணிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது.

கொல்கத்தாவும் 12 புள்ளிகளில் உள்ளது, மும்பையும் 12 புள்ளிகளில் உள்ளது. இந்நிலையில் கொல்கத்தா தகுதி பெற வேண்டுமெனில் ராஜஸ்தானை வீழ்த்தி நேராக பிளே ஒப் சுற்றுக்குத் தகுதி பெற வேண்டும். மும்பை சன்ரைசர்ஸை வீழ்த்தினாலும் 14 புள்ளிகள் பெற்றாலும் ரன் விகிதம் மும்பையை வெளியேற்றி விடும். மாறாக கொல்கத்தா தோற்று விட்டால் மும்பை இந்தியன்சின் கடைசி வெற்றி அதை எளிதில் பிளே ஓப்க்குக் கொண்டு செல்லும். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2422

### யனு




### நிலக்சன்




### சானு




### அத்வைதா




### நிசா




### ஜனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசிபலன்

**08.10.2021**
**புரட்டாதி 22, வெள்ளிக்கிழமை**
**துதியை பிற்பகல் 1.46 மணிவரை**
**சுவாதி முன்னிரவு 10.45 மணிவரை**
**சுபநேரம் 6.02-7.32 மணிவரை**
**இராகுகாலம் 10.32-12.02 மணிவரை**
**சந்திராஷ்டமம்: உத்திரட்டாதி, ரேவதி**

வளவன்

**மேஷம்** – வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை காண வேண்டிய நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** – பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் குதூகலம் கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு.

**கடகம்** – பெற்றோர் மீது பிரியம் கூடும், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் பெருக வழிசமைத்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** – வழிபாட்டால் பெருமை காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு.

**கன்னி** – எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டுச் சிந்தனை மேலாங்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** – தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சிந்தனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** – காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** – பொது வாழ்வில் புகழ் கூடும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** – பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சிக்கு புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** – இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** – கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**உன் கண்ணீரில் கூட ஒரு கம்பீரம் இருக்கட்டும்**

# ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு 2022 பட்ஜெட் மூலம் தீர்வு

## இராஜாங்க அமைச்சர் சுசில் உறுதி

**(கொழும்பு)**

**2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குக் கட்டம் கட்டமாகத் தீர்வு காணப்படும் என கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போதே, மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பது வெறுமனே நிதிப் பிரச்சினை மாத்திரமல்ல. 1994 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவை அரசமைப்பை அறிமுகப்படுத்தி சம்பளத்தை அதிகரித்தமையால் ஏற்பட்ட அரச சேவை முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வி.சி.பெரேரா ஆணைக்குழுவை நியமித்த பின்னர் அதிபர், ஆசிரியர்களின் சம்பளத்தைப் பின்தள்ளி ஏனைய அரச சேவைகளின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க முற்பட்டமையால் ஏற்பட்ட பிரச்சினையாகும்.

கொரோனா நெருக்கடியால் நிதி தொடர்பான பிரச்சினைகள் உள்ள அதேவேளை, ஏனைய அரச சேவைகளுக்குப் பாதிப்பில்லாது இந்த விவகாரத்துக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற தேவை அனைத்து அரசுகளுக்கும் இருந்தமையால் தான் கடந்த 26 வருடங்களாக இந்தப் பிரச்சினை தொடர்கின்றது.

அமைச்சரவை உப குழுவின் சாதகமான சிபாரிசுகளின் பிரகாரம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுகொடுப்பது குறித்து அரசு அவதானம் செலுத்தியுள்ளது.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக கட்டம் கட்டமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடிவெடுக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்தார்.(4-5)

# போக்குவரத்துத் துறையை ஊக்குவிக்க அமெரிக்கா உதவி



(கொழும்பு)

இலங்கையில் போக்குவரத்துத் துறையை ஊக்குவிக்க அமெரிக்க அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் தலைமை அரசியல்/பொருளாதார அதிகாரி திருமதி.சூசன் வால்கே தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் நேற்று போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, நாட்டின் போக்குவரத்துத் துறையின் தரத்தை மேம்படுத்தவும் இதற்காக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் அமைச்சகம் ஒரு நிலைப்பாட்டில் உள்ளது என தெரிவித்தார். (4-5)

# சுகாதார வழிகாட்டல்களை வெளியிட்டால் 15 முதல் ரயில்கள் சேவையில் ஈடுபடும்

(கொழும்பு)

ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்க தயாராக உள்ளதாக ரயில் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய சுகாதார வழிகாட்டல்கள் விரைவில் வெளியிடப்பட்டால்எதிர்வரும்15 ஆம்திகதி முதல் ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்க தீர்மானித்துள்ள தாகவும் அவா் தெரிவித்துள்ளாா்.

கொரோனா பரவல் காரணமாக ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (4-5)

# கல்லாற்றுப் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரு குழுக்களுக்கிடையிலான சண்டையில் பொது பாதுகாப்பு கடமைக்காக சென்ற பொலிஸார் மீது தாக்குதல் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்தனர். அதனையடுத்து நேற்றைய தினம் தருமபுரம் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து குற்றச் செயலுடன் தொடர்புடையவர்களை கைது செய்யும் நோக்கில் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

இச்சுற்றி வளைப்பில் அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்த 4 மோட்டார் சைக்கிள்கள், வாள் ஒன்று, இடியன் துப்பாக்கி ஒன்று, சட்டவிரோத கசிப்பு 18 லீற்றர் என்பன மீட்கப்பட்டன.

மேலும் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் உட்பட சுற்றிவளைப் பின் மூலம் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (7-5-316)

# ‘தூயகரம் தூய நகரம்’ தொனிப்பொருளில் புதிய திண்மக் கழிவகற்றல் நடைமுறை

(குப்பிழான்)

யாழ்.மாநகர முதல்வர் வி. மணிவண்ணனின் ஒழுங்குபடுத்தலில் யாழ் மாநகர சபையின் திண்மக் கழிவகற்றலுக்கான புதிய நடைமுறை திட்டமிடப்பட்டுள்ளது.

”தூய கரம் தூய நகரம்” எனும் தொனிப் பொருளிற்கு அமைய யாழ்.மாநகர சபையின் திண்மக் கழிவகற்றும் நடைமுறையை மேம்படுத்தும் நோக்கத்தில் புதிய நடைமுறைகளை யாழ். மாநகர முதல்வர் நேற்று முன்தினம் புதன்கிழமை அறிமுகப்படுத்தினார்.

இதேவேளை, திண்மக் கழிவுகளைத் தரம் பிரித்தல், விழிப்புணர்வு, முறைப்பாடு மற்றும் தண்டப்பண விபரம் போன்றவற்றை உள்ளடக்கியதாக யாழ்.மாநகரசபையின் திண்மக் கழிவகற்றல் புதிய நடைமுறைத் திட்ட நடைமுறைக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

இக் கையேடு வழங்கும் நடைமுறையும் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (7-5-18)



கரணவாய் இளங்கோ சனசமூக நிலையத்தால் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நிலையத் தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. (படம்: மகாலிங்கம்)



வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கட வரதராஜப்பெருமாள் ஆலயத்தின் மஹோற்சவத்தின் கொடியேற்றம் நேற்று சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படும் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என நல்லூர் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப்பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச்சமர்ப்பிக்குமாறு மேலும் தெரிவித்துள்ளார். (7-5)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப் பரீட்சை நேரம் அறிவிப்பு

நேற்றைய தொடர்ச்சி...

| ஏற்கனவே பரீட்சைக்காக வழங்கப்பட்ட திகதி | பரீட்சை நடைபெற இருக்கின்ற அமர்வும் நேரமும் |
|---|---|
| 03.09.2021 | 16.10.2021 சனிக்கிழமை நண்பகல் 12.30 |
| 07.09.2021 | 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 |
| 08.09.2021 | 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 |
| 09.09.2021 | 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 |
| 10.09.2021 | 23.10.2021 சனிக்கிழமை காலை 9.30 |
| 14.09.2021 | 23.10.2021 சனிக்கிழமை காலை 11.00 |
| 15.09.2021 | 23.10.2021 சனிக்கிழமை நண்பகல் 12.30 |
| 16.09.2021 | 24.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 |
| 17.09.2021 | 24.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 |
| 21.09.2021 | 24.10.2021 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 |
| 22.09.2021 | 30.10.2021 சனிக்கிழமை காலை 9.30 |
| 23.09.2021 | 30.10.2021 சனிக்கிழமை காலை 11.00 |
| 24.09.2021 | 30.10.2021 சனிக்கிழமை நண்பகல் 12.30 |
| 28.09.2021 | 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 |
| 29.09.2021 | 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 |
| 30.09.2021 | 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 |
| 01.10.2021 | 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 |

# சவால்களைத் தாண்டி வராவிட்டால் நிரந்தர மாற்றங்கள் ஏற்படாது

## அங்கஜன் இராமநாதன் எம்.பி.

(சாவகச்சேரி)

சவால்களைத் தாண்டி வராவிட்டால் எந்த மாற்றமும் நிரந்தர மாற்றமாக அமையாது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் , மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாவற்குழியில் இடம் பெற்ற நகர அபிவிருத்தி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இரசாயன உரம் தடை செய்யப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்த விடயம். எனவே அந்தக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு கமநலத் திணைக்களங்களால் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கமநல அமைப்புக்களுக்கு சேதனப்பசளை உற்பத்தி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் சேதனப்பசளை உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்க தயாராக இருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இரசாயன உரத்தில் செய்கை செய்து பழக்கப்பட்ட நாம் முதன்முறையாக இரசாயன உரம் இல்லாத செய்கையில் ஈடுபடுகிறோம்.

முதல் முயற் சியில் ஒரு சில தடங்கல்கள் மற்றும் சவால்கள் இருக்கும். இருப்பினும் அந்த சவால்களைத் தாண்டி வராவிட்டால் இந்த மாற்றங்கள் எவையுமே நிரந்தர மாற்றங்களாக அமையாது என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (7-5-30)



சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு **American Jewish World Service (AJWS)** நிறுவனத்தின் நிதி அனுசரணையில் ரூபாய் 35 இலட்சம் பெறுமதியான இரண்டு **Multipara Meter Monitor - Modular Type** அடங்கிய மருத்துவ உபகரணங்கள் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தியிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

## மத்தியஸ்தர் சபை அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச மத்தியஸ்தர் சபையானது கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையில் இருந்து ஆரம்பமாகிய நிலையில் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணி வரை சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக தடுப்பூசி சான்றிதழ் பரிசீலிக்கப்பட்டு சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெறும் என யாழ். பிரதேச மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் கௌரி முரளிதரன் அறிவித்துள்ளார். (7-5-106)

# வெகுசன ஊடகவியல் பட்டயக் கற்கைகள் நிறுவனம்

## ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கை வெகுசன ஊடகவியல் பட்டயக்கற்கைகள் நிறுவனம் எனும் பெயரிலான வெகுசன உயர்கல்வி கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் வெகுசன தொடர்பாடல் பட்டப்படிப்புக் கற்கைகள் சில காணப்பட்டாலும், குறித்த கற்கைகள் மூலம் தொழில்வாண்மை ரீதியான ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்குப்போதியவாறான பிரயோகரீதியானதும் தொழில்நுட்ப ரீதியானதுமான அறிவு வழங்கப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதனால், தற்போது வெகுசன ஊடகத்துறையில் பணிபுரியும் ஊடகவியலாளர்களுக்கும், ஊடக முகாமையாளர்களுக்கும் அதேபோல் ஊடகத்துறையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கும் பாடசாலை மாணவர்களுக்கும் வெகுசனத் தொடர்பாடல் பாடவிதானத்தை கற்பதற்கும், தேவையான பிரயோக ரீதியான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களுடைய இயலளவு விருத்தியை ஏற்படுத்தி தொழில்வாண்மையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு இலங்கை வெகுசன ஊடகவியல் பட்டயக்கற்கைகள் நிறுவனம் எனும் பெயரிலான நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (4-5)

# நாட்டில் முதன்முறையாக

## பெண் அதிகாரிகளிகள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக தரமுயர்வு

(கொழும்பு)

உடன் அமுலாகும் வகையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகக் கடமையாற்றி வரும் பெண்கள் மூவர் தரமுயர்த்தப்பட்டுள்ளனர். அதற்கமைய, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகக் கடமையாற்றிய ரேணுகா ஜயசுந்தர, நிஷா நதி ஜயசுந்தர, பத்மினி வீரசூரிய ஆகியோர் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில், பெண் பொலிஸ் அதிகாரிகள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (4-5)

# யுத்தத்தை நிறுத்துவதே நோக்கம் யாரையும் தோற்கடிப்பது அல்ல

## மகிந்தவின் எதிர்பார்ப்பாக இருந்தது இதுவே என்கிறார் வாசு



(கொழும்பு)

எவரையும் தோற்கடிப்பது அன்றி யுத்தத்தை நிறைவு செய்வதே பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அன்றைய எதிர்பார்ப்பாக காணப்பட்டது என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நயினாதீவில் இடம்பெற்ற தாளையடி கடல்நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணப் பணிகள் மற்றும் யாழ். நகர நீர் வழங்கலுக்கான நீர்க்குழாய் அமைக்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், அலரி மாளிகையில் இருந்து காணொளி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்ட போதே இதைத் தெரிவித்தார்.

"எவரையும் தோற்கடிப்பது அன்றி யுத்தத்தை நிறைவு செய்வதே பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அன்றைய எதிர்பார்ப்பாக காணப்பட்டது என மேலும் தெரிவித்தார். (4-5)

# இரசாயன உரத்திற்கான தடையை ரத்துச் செய்யக்கோரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

இரசாயன உர இறக்குமதி மற்றும் பாவனையை தடை செய்வதற்கு அமைச்சரவை கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி எடுத்த தீர்மானத்தை ரத்துச் செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய விவசாய முன்னணியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார மற்றும் விவசாய முன்னணியின் செயலாளர் ஆகியோர் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனுவில் பிரதிவாதிகளாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, விவசாய அமைச்சின் செயலாளர் உதித் கே விஜேசிங்க, தேசிய உரச் செயலகம், விவசாயத் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இரசாயன உர இறக்குமதி மற்றும் பாவனையை தடை செய்யும் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் விவசாயத்தை ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள லட்சக்கணக்கான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட வட்டாரம் 5, ஆறுமுகம் வீதியில் 27 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தை உடைய ஆதனம் சின்னப்பா தம்பாபிள்ளை எனும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை நுணாவில் மேற்கு வீரகத்தியார் கந்தையா கணபதிப்பிள்ளையும் பெண் திரவியமும் பிரசித்த நொத்தாரிசு செல்லப்பா அம்பிகைபாகன் முகதாவில் 1976/10/03 ஆம் திகதியிடப்பட்ட 509 ஆம் இலக்க நன்கொடை அறுதி மூலம் கணபதிப்பிள்ளை சிவமணிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் 2019/04/02 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு இ.த.விக்கினராஜா முகதாவில் 2291 ஆம் இலக்கத்தின் நன்கொடை அறுதி மூலம் நடராசா நவரத்தினத்திற்கு வந்தடைந்தது. சாவகச்சேரி நுணாவில் மேற்கு நடராசா நவரத்தினம் பிரசித்த நொத்தாரிசு நிருபா பாலசிங்கம் முகதாவில் 2020/03/11 ஆம் திகதியிடப்பட்ட 746 ஆம் இலக்க நன்கொடை உறுதிமூலம் யாழ்ப்பாணம் கோவில் வீதி 1 ஆம் ஒழுங்கை இல. 28, யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் நிர்வாக சபைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று நுணாவில் இறை புதுவளவு குடியிருப்பும் மறுபிரிவும் செம்பாடு வளவும். ஆனால் தற்போது 2019/03/29 இல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் க.கனகசபை அவர்களால் அளந்து வரைந்த 7547 ஆம் இலக்கத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு இருபத்தொன்று குளி ஆறு தசம் ஒன்று ஐந்தும் (நிலப்பரப்பு 21 குளி 6.15)

இதற்கு எல்லைகளாக,
வடக்கு- ஞானப்பிரகாசம் பெண் கமலாவுக்கு உரிய ஆதனம்
கிழக்கு- அப்புக்குட்டி பெண் அன்னப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம்
மேற்கு- ஒழுங்கை
தெற்கு- ஒழுங்கையும் நாகன் ஜீவராசாவிற்கும் நாகன் தற்கராசாவிற்கும் உரிய ஆதனம்

தற்போது யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் நிர்வாக சபையினருக்கு இவ்வாதனத்தை எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களாயின் இங்குள்ள உறவினர்கள் ஊடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்தில் உரிமையாளரது பெயரிற்குப் பதிலாக விண்ணப்பதாரியின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி (8175)


# 15 ஆம் நாள் நினைவஞ்சலியும் கண்ணீர் அஞ்சலியும்



விண்ணில் 04 10 1986

மண்ணில் 21 09 2021

பொலிகண்டி கந்தவனக் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சாதக இளவரசு, சாதக கலாபூஷணம், ஆகம கிரியாஜோதி, மாருதி பிரதிஷ்டாசாகரம், கணபதி உபாசகர், சிவபூஜா துரந்தரர்

அமரர். சிவஸ்ரீ. சண்முக சத்தியேந்திரக் குருக்கள்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய கந்தவனப்பெருமானையும் மருதாம்புலம் பத்திரகாளி அம்பாளையும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி!

(8128)

ச.வைத்தியநாதக்குருக்கள்
பிரதமகுரு, கந்தவனம் தேவஸ்தானம்,
மருதாம்புலம் பத்திரகாளி தேவஸ்தானம், பொலிகண்டி.

# 2025 ஆம் ஆண்டுக்குள் தாய்வானை முழுமையாக ஆக்கிரமிக்கும் வல்லமையை சீனா பெறும்

(தைபே)

**2025 ஆம் ஆண்டுக்குள் தங்கள் நாட்டை சீனா ஆக்கிரமிக்கக் கூடும் என்று தாய்வான் பாதுகாப்புத்துறை அமைச்சர் சியு குவோ-செங் அச்சம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து 'சைனா டைம்ஸ்' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கி 4 நாட்களில், தாய்வான் வான் எல்லைக்குள் சுமார் 150 சீனப் போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்தன. தாய்வான் எல்லைக்குள் அதிக எண்ணிக்கையில் சீனப் போர் விமானங்கள் ஊடுருவியது இதுவே முதன் முறையாகும்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென், 'சீனாவுக்கு எதிராக நாங்கள் அசட்டுத் துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டோம். ஆனால், எங்களது எல்லைகளைக் காக்க என்ன வேண்டுமானாலும் செய்வோம்' என்றார்.

இது தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின்போது பேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் சியு குவோ-செங், சீனாவுடனான போர்ப் பதற்றம் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக மோசமாக உள்ளதாக எச்சரித்தார்.

தாய்வான் வளைகுடாவில் தவறுதலாக தாக்குதல்கள் நடத்தப்பட்டு, அது பெரிய மோதலாக உருவாகும் அபாயமிருப்பதாகவும் கூறினார்.

பாதுகாப்புத் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரும் மனுவில், சீனா தனது பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, தாய்வான்தீவைக் கைப்பற்றுவதற்குத் தேவையான நவீன போர் விமானங்கள், வானிலும் நீர்ப்பரப்பிலும் இயங்கக் கூடிய விமானப் படகுகள் ஆகிவற்றுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தாய்வானுக்கு அருகே சீனக் கடற்படை நடமாட்டம் அதிகரித்துள்ளதையும் அந்த மனு சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும் 'முள்ளம்பன்றி உத்தி' என்றழைக்கப்படும் தந்திரத்தின் மூலம், மிகப் பெரிய வலிமை வாய்ந்த இராணுவமும் தங்களது எல்லைக்குள் எளிதில் ஊடுருவ முடியாத வகையில் தனது இராணுவக் கட்டமைப்பை தாய்வான் ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-5)

# உலகின் முதல் மலேரியாத் தடுப்பூசியைப் பெறும் ஆபிரிக்கக் குழந்தைகள்

(லண்டன்)

உலகின் முதல் மலேரியா தடுப்பூசி, ஆபிரிக்கக் குழந்தைகளுக்குச் செலுத்தப்படவுள்ளது.

மலேரியா காய்ச்சலைத் தடுப்பதற்காக மாஸ்குயிரிக்ஸ் என்ற தடுப்பூசியை கிளாக்ஸோ ஸ்மித்கிளைன் நிறுவனம் கடந்த 1987 இல் உருவாக்கியது.

அந்த தடுப்பூசியின் செயற்றிறன் குறைவாக இருந்ததால், அதை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக, கடந்த 2019 இல் இருந்து கானா, கென்யா, மாலவி ஆகிய நாடுகளில் 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு மலேரியா தடுப்பூசி செலுத்தப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆராய்ச்சியில் கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் இந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை ஒப்புதல் அளித்தது.

முதன் முறையாக, ஆபிரிக்காவைச் சேர்ந்த சிறுவர்கள், மலேரியா தடுப்பூசியை செலுத்திக்கொள்ள இருக்கிறார்கள். 'இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம்' என்று உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோரஸ் அதானோம் கூறினார். (7-5)

# ஆப்கானில் குருத்வாரா சூறை சீக்கியர்கள் சிறை பிடிப்பு



(காபூல்)

ஆப்கானில் தலிபான்கள் குருத்வாராவை சூறையாடி அங்கிருந்த சீக்கியர்களை சிறைபிடித்திருப்பது சிறுபான்மை மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானை இரு மாதங்களுக்கு முன் கைப்பற்றிய தலிபான் பயங்கரவாதிகள், அனைத்து மதத்தினரும் அவரவர் விருப்பப்படி வழிபாடு நடத்த அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவித்திருந்தனர்.

அதற்கு மாறாக நேற்று முன்தினம் தலைநகர் காபூலில் உள்ள சீக்கியர்களின் குருத்வாராவுக்குள் நுழைந்து அங்கிருந்த சிலைகளை அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த வன்முறைச் சம்பவத்தை, உலக சீக்கியர் பேரவைத் தலைவர் புனீத் சிங் சந்தோக் உறுதி செய்துள்ளார்.

சமீபத்தில் ஆப்கான், பக்தியா மாகாணம், சம்கனி பகுதியில் உள்ள குருத்வாராவின் உச்சியில் பறந்த சீக்கியர் கொடியை தலிபான்கள் அகற்றினர்.

ஆப்கானில் தலிபான் பயங்கரவாதிகளின் அராஜகம் அதிகரித்து வருவதால், அங்குள்ள சீக்கியர், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் பீதி அடைந்துள்ளனர். (7-5)

# பாகிஸ்தானில் நிலநடுக்கம்; 20 பேர் பலி, 300 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான், பலுசிஸ்தான் பகுதிகளில் நேற்று ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினால் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 300 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நில அதிர்வு மேலும் பல வேறு பகுதிகளில் உணரப்பட்டுள்ளது.


நிலநடுக்கம் உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.20 மணிக்கு ரிக்டர் அளவு கோலில் 5.9 ஆக 15 கி.மீ.ஆழத்தில் ஹர்னாய் அருகே ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தினால் பீதியடைந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

அனைத்து மருத்துவமனைகளிலும் அவசரநிலை அறிவிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் நடந்து வருகின்றன.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (7-5)

# பெஞ்சமின், மேக்மில்லன் ஆகியோருக்கு வேதியலுக்கான நோபல் பரிசு




(சுவீடன்)

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுகள் இம்மாதம் 4 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அறிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் 2021 ஆம் ஆண்டின் வேதியலுக்கான நோபல் பரிசு பெறுபவர்கள் குறித்து நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

ஜேர்மனியைச் சேர்ந்த பெஞ்சமின் லிஸ்ட், அமெரிக்காவை சேர்ந்த டபிள்யூ சி மேக்மில்லன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது. (7-5)

# புனரமைப்பு செய்யப்பட்டு நான்கு வருடத்திற்குள் சேதமடைந்த வீதி

## பொதுமக்கள் விசனம்



(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தின் ஸ்கந்தபுரம் முக்கொம்பன் பிரதான வீதி பல மில்லியன்கள் ரூபாய் செலவில் காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் முடியும் முன்னரே முற்றாக தேசமடைந்து மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவது தொடர்பில் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயன்படுத்தும் குறிப்பிட்ட வீதியானது முதற் தடவையாக பொது மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைவாக காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டது.

இருப்பினும் குறித்த வீதி பல இடங்களில் மிக மோசமாக சேதமுற்றுள்ளது. அத்தோடு வீதியின் பல இடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு அப் பகுதிகளும் சேதமடையும் நிலையில் காணப்படுகிறது எனவும் பொதுமக்கள் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (7-5-6-315)

# சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறு கல்விச் செயற்பாடுகள் நடைபெற வேண்டும்

## முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கலந்துரையாடல்



(கண்டாவளை)

நாடளாவிய ரீதியில் முன்பள்ளிகள் மற்றும் 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளை ஆரம்பித்தல் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடலானது முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது

இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறு பாடசாலை கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

மேலும் இக் கலந்துரையாடலில் 'ஆசிரியர்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்தியமை உறுதிப்படுத்தல்', 'டெங்கு பரவும் காலநிலை ஆரம்பித்திருப்பதனால் அவை பெருகும் இடங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படல்', 'பாடசாலைக்கு உள்வரும் பிரதான நுழைவாயில் மற்றும் வகுப்பறைகளில் தொற்று நீக்கும் திரவங்கள் சரிவரப்பயன்படுத்தல், என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதனைத் தவிர சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார பரிசோதகர் ஆகியோரிடம் தொடர்பில் இருக்க வேண்டும். மற்றும் 'பெற்றோர்கள் வாகனங்கள் மூலம் பிள்ளைகளை கொண்டு வரும்போது அங்கு ஏற்படக்கூடிய சமூக இடைவெளிகள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு இவற்றைப் பாடசாலைகளில் பின்பற்றச் செய்வதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் அதிக அவதானம் செலுத்தப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr.எம்.உமாசங்கர், மாவட்ட தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி Dr.வி.விஜிதரன், பிரதேச வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர் லிசோகேகிதா, முல் லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.தமிழ்மாறன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.முகுந்தன் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (7-5-6-315)

# நொச்சிமுனை பகுதியில் 162 கிலோ மஞ்சள் மீட்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி முழங்காவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிமுனைப் பகுதியில் 162 கிலோ மஞ்சள் மீட்கப்பட்டது. இராணுவ புலனாய்வுப்பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்றைய தினம் நொச்சிமுனை பகுதியில் கடற்கரைக்கு கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட நான்கு பைகளிலான மஞ்சளை முழங்காவில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்கள் மற்றும் மஞ்சள் என்பவற்றை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-5-6-316)

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனம்

(நெளுக்குளம்)

வன்னி மாவட்டத்தின் புதிய பொலிஸ்மா அதிபராக கொழும்பு போக்குவரத்து பிரிவில் பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய டி.பி.சந்திரசிறி நேற்றுக் காலை வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த திங்கட்கிழமை வன்னி பிராந்தியத்தில் பணி யாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்தின ஓய்வு பெற்று சென்றதையடுத்து புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டார். (7-5-6-299)

# ஆலய குருக்கள் உள்ளிட்ட மூவருக்கே அனுமதி

## வவுனியா சுகாதாரப் பிரிவினர்

(குருமன்காடு)

வவுனியாவில் உள்ள ஆலயங்களில் நடைபெறும் நவராத்திரி பூஜைக்கு ஆலய குருக்கள் உள்ளிட்ட மூவருக்கே அனுமதி வழங்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நவராத்திரி பூஜை மேற்கொள்ள ஆலய குருக்களுக்கும் உபயகாரர் குடும்பத்தில் இருந்து இருவருக்கும் என மூவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். எனவே, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நவராத்திரி பூஜைகளை நடத்தவுள்ள ஆலய நிர்வாகத்தினர் உங்கள் பிரிவுக்குட்பட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்களிடம் அனுமதியைப் பெற்று, சுகாதார நடைமுறைகளுடன், அறிவுறுத்தலுக்கு அமைய நவராத்திரி உற்சவத்தை நடத்த முடியும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (7-5-6-250)

# காருடன் மோட்டார் சைக்கிள் விபத்து; இளைஞன் காயம்



(நெளுக்குளம்)

வவுனியா குருமன்காடு சந்திக்கு அருகாமையில் காருடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இளைஞன் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, மன்னார் வீதியூடாக வவுனியா நகர் நோக்கிச்சென்று கொண்டிருந்த கார் எதிர்ப்பக்கம் திரும்ப முற்பட அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

அத்துடன் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இன்னுமோர் காரும் இவ்விபத்தில் சேதமடைந்துள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-5-6-299)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீட்டு மதிலில் மோதி விபத்து



(நெளுக்குளம்)

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில் வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை டாட்டா ரக வாகனம் வீட்டின் மதிலில் மோதியதில் ஒருவர் காயமடைந்ததாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கிப்பயணித்த சிறிய டாட்டா ரக வாகனம் வேகத்தை கட்டுப்படுத்த முடியாததால் விபத்து இடம்பெற்றதாகவும் குறித்த விபத்தில் வாகன சாரதி காயமடைந்துள்ளதுடன், வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் வீட்டின் மதில் உடைக்கப்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈரப்பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (7-5-6-299)

# 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் விரைவில் பூஸ்டர் தடுப்பூசி

**(கொழும்பு)**

**இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பைசர் தடுப்பூசியை பூஸ்டர் தடுப்பூசியாக வழங்குவதற்கு சுகாதாரத் தரப்பு கவனம் செலுத்தியுள்ளது.**

இதற்காக சம்பந்தப்பட்ட குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், சுகாதார சேவையில் உள்ளவர்கள் உட்பட முன்னணி ஊழியர்களுக்கும் பைசர் தடுப்பூசியை பூஸ்டர் டோஸாக கொடுக்க முடிவு செய்யப்பட்டது. அந்த இலக்கை அடைந்த பிறகு, 60 வயதிற்குட்பட்டவர்களுக்கும் 20 வயதுக்கு மேற்பட்ட பல நோய்களால் அவதிப்படுவோருக்கும் பூஸ்டர் தடுப்பூசிகளை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (4-5)

# முன்னாள் சிறப்பு படைத்தளபதியின் மகளே பாடகி ஜொகானி

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரில் கடமையாற்றிய சிறப்புப் படைகளின் தளபதியான கேணல் பிரசன்ன டி சில்வாவின் மகளே இலங்கையின் பிரபல பாடகி ஜொகானி என்பது முன்னாள் இராணுவத் தளபதியும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் அறிவிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.

இலங்கையின் பிரபல பாடகிக்கு கிடைத்திருக்கும் அங்கீகாரத்திற்கு ("மனிகே மகே கித்தே" எனும் பாடல் மூலம் சர்வதேச இசை அரங்கில் தனது பெயரைப் பொறித்துள்ள நிலையில்) வாழ்த்து தெரிவித்துள்ள அவர், அவரது தந்தையாருடன் தான் பணியாற்றிய தருணங்கள், போர்க்கள அனுபவங்களை தனது முகப்புத்தகத்தில் சரத் பொன்சேகா பதிவிட்டுள்ளார். (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்



### நன்மைகளை வாரி வழங்கும் நவராத்திரி இன்று 2ஆம் நாள்



**அம்பிகைக்கு அலங்காரம்**

நவராத்திரியில் ஒவ்வொரு நாளும் அம்பாளுக்குச் செய்யும் அலங்கார விபரம்,

முதல்நாள்- அம்பிகை குமரி

இரண்டாம்நாள்-ராஜராஜேஸ்வரி

மூன்றாம் நாள்- மகிஷனை அழித்திடும் கோலம்

நான்காம் நாள்- வெற்றித் திருக்கோலம்

ஐந்தாம் நாள்- கம்பன் தூதன் துர்க்கையிடம் சொல்லுதல்

ஆறாம் நாள்- ராஜநாக ஆசனத்தில் சண்டி வடிவில் அலங்காரம்

ஏழாம் நாள்- சண்டி முண்டர்களை அழித்துவிட்டு பொன்னாசனத்தில் வீற்றிருத்தல்

எட்டாம்நாள்-ரக்தபீஜனை வதம் செய்த திருக்கோலம்

ஒன்பதாம் நாள்- ஞானம், வீரம், வெற்றி (வில், அம்பு, அங்குசம், சூலம் ஏந்தி காட்சி தருதல்)

பத்தாம் நாள்-விஜயதசமி அன்று அம்பு எய்தல் காட்சி (தொடரும்)

# செய்தித்துளிகள்

## நாமல் ராஜபக்ஷவிற்கு புதிய பதவி

(கொழும்பு)

இலங்கை - பிரான்ஸ் பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் புதிய தலைவராக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டது. (4-5)

## துப்பாக்கியுடன் சிக்கிய இளைஞன்

(கொழும்பு)

தெனியாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகஹஹேக பிரதேசத்தில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெலிஅத்தகும்புர - அம்பஹதேன பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (4-5)

## விபத்து; குடும்பஸ்தர் பலி!

(கொழும்பு)

லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை - தம்புள்ளை வீதி, ஹிரிவடுன்ன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

ஹபரண பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 120 |
| தக்காளி | 60 | 80 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 160 | 130 | 140 | 150 |
| கரட் | 100 | 140 | 140 | 160 |
| பூசணி | 60 | 70 | 60 | 60 |
| புடோல் | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 100-250 | 220 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 100-150 | 150 |
| பாகற்காய் | 350 | 600 | 450 | 350 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 240 |
| லீக்ஸ் | 200 | 180 | 180 | 200 |
| பீற்றூட் | 50 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 240 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 280 | 160 | 200 |
| போஞ்சி | 240 | 300 | 350 | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | -- | 120 |
| கீரை – 1 பிடி | 60 | 50 | 30 | 60 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 40-70 | 50-70 |
| இராசவள்ளி | -- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | -- | 320 | -- | 280 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 30 | 30 |
| ஈரப்பலா | 50 | -- | -- | -- |

# மன்னார் எண்ணெய்க் கிடங்கு வேலைத்திட்டத்திற்கு அனைவரது ஒத்துழைப்பும் வேண்டும்

### அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன

**(கொழும்பு) மன்னார் எண்ணெய்க் கிடங்குகள் என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததொரு விடயமாக கருதி, இந்த வேலைத்திட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல அனைவரும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.**

மன்னாரிலுள்ள எண்ணெய்க் கிடங்குகளில் உள்ள எரிபொருள் மற்றும் எரிவாயுவை கடந்த ஆட்சியாளர்கள் வெளிக் கொண்டுவர முயற்சித்திருந்தால் நாடு அதன் பயனை இன்று அனுபவித்திருக்கும் என துறைமுகங்கள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

எந்தவொரு முதலீட்டையும் தவறான கோணத்தில் பார்த்தால் ஒரு நாடாக நாம் முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாது. கொள்கை ரீதியாக தீர்மானங்களை எடுக்க வேண்டும். அரசாங்கங்கள் மாறும் போது கொள்கைகள் மாறக் கூடாது. வரலாறு முழுவதும் அரசாங்கங்கள் மாறும் போது அதன் கொள்கைகளும் மாறியமையால் தான் ஒரு நாடாக எம்மால் முன்னேற முடியாதுள்ளது.

எரிவாயு மற்றும் எரிபொருளை நாம் மேல் கொண்டு வந்தால் எமது நாட்டின் எதிர்காலம் அங்கு தான் உள்ளது. இந்தப் பணிகளை செய்யும் போது மன்னாரை விற்று விட்டனர், கிழக்கு முனையத்தை விற்றுவிட்டனர் எனக் கூச்சலிடுகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் போது நாம் ஆட்சியில் இருப்போமா இல்லையா? என்று தெரியாது. ஆனால் நாட்டின் எதிர்காலத்திற்கான புள்ளியை வைத்துள்ளோம் எனத் தெரிவித்தார். (4-5)

# இருதய சத்திர சிகிச்சை அடுத்த வாரம் முதல் ஆரம்பம்

(கொழும்பு)

கொவிட் தொற்றுநோய் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில், இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருதய சத்திர சிகிச்சை (பைபாஸ்) அடுத்த வாரம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சந்தன கஜநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில், இரண்டு சத்திர சிகிச்சை அறைகளில், தினமும் சுமார் 5 இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி இருதய சத்திர சிகிச்சைக்காக காத்திருக்கும் பட்டியலில் உள்ள நோயாளர்களை உடனடியாக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(4-5)

# நிருபமா ராஜபக்ஷவின் கணவருக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசனை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய பண்டோரா பேப்பர்ஸ் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக வாக்கு மூலம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக இன்று வெள்ளிக்கிழமை குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பண்டோரா பேப்பர்ஸ் தொடர்பில் விசாரணை நடத்தி ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

இந்த நிலையிலேயே, அவர் இவ்வாறு அழைக்கப்பட்டதாக அந்த ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (4-5)

# பூஸ்டர் தடுப்பூசியாக பைஸரை பெற்ற பின் நாட்டிற்கு வரவும்

### கட்டார், சவுதி அறிவிப்பு

(கொழும்பு)

சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக் கொண்ட இலங்கை பணியாளர்கள் தமது நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு கட்டார் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்வதற்கு பைசர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அத்தியாவசியம் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே இலங்கைப் பணியாளர்கள் பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டு நாட்டுக்கு வருமாறு கட்டார் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன. (4-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விலங்குகள் நோய் கொடுக்கும்!

ஒரு நண்பர் வந்தார். அவர் முகத்திலே கீறல்கள். நகத்தாலே கீறியது போலே இருந்தது. “என்ன சேர்... வீட்டில் தகராறா?” என்று கேட்டேன். “இல்லை சேர்... இது செல்லமாகக் கீறியது” என்றார். “என்ன சேர் அநியாயம் அதுக்காக இப்படியா?” என்றேன்.

“ஆமாம் சேர்...பாவம் பூனை அதுக்கு என்ன தெரியும்?” என்றார். “என்ன சொல்லுகின்றீர்கள்?” என்றேன் ஒன்றும் புரியாமல். எங்கள் வீட்டிலே செல்லமாக வளர்க்கின்றோம் அல்லவா ஒரு பூனைக்குட்டி அதுதான் விராண்டியது என்றார் கன்னத்தைத் தடவிக்கொண்டு. அதை எல்லாம் ஏன் சேர் வீட்டிலே போய் வளர்க்கின்றீர்கள் என்றேன்.

நீங்கள் தானே சேர் சொன்னீர்கள் இன்று ஒரு தகவலிலே! செல்லப்பிராணிகள் வளர்க்கின்றது மனதிற்கும் உடம்பிற்கும் நல்லது என்று. இப்ப நீங்கள் மாற்றிப் பேசுகிறீர்கள்.

இது என்ன சேர் நியாயம் என்றார். செல்லப் பிராணிகள் வளர்க்கின்றதனாலே உடம்பிற்கும் மனதிற்கும் நல்லது என்று சொல்வது உண்மை. அதேநேரத்தில் அதற்கு வேண்டிய தடுப்பூசிகள் எல்லாம் போட்டு சுத்தமாக வளர்க்கவில்லை என்றால் அது எங்களுக்கு கெடுதல் செய்யும் என்பது உண்மை என்று சொல்லி அவரைச் சமாதானப்படுத்தினேன்.

பூனை விராட்டினால் அதனாலே வரும் இடைஞ்சலுக்குப் பெயர் (Cat Scratch Disease) பூனை விராண்டல் நோய். இதனால் என்ன ஆகும் என்றால் முதலில் சில நாள் காய்ச்சல், அதிகப்படியான களைப்பு உணர்ச்சி, எரிச்சல், தலைவலி, தெளிவற்ற பார்வை, கண்ணில் நீர் கசிதல் இவையெல்லாம் இருக்கும்.

அன்டிபயாடிக்ஸ் மூலமாக இதைச் சரிப்படுத்தலாம். இருந்தாலும் ஒரு ஐந்தாறு மாதத்திற்கு கஷ்டம் தான். பூனையினுடைய இரத்தத்திலே RH எனும் ஒரு நுண்ணுயிர் இருக்கும்.

இதனாலே பூனைக்கொன்றும் தொந்தரவில்லை. மனிதனுக்குத்தான் தொந்தரவு. பூனை கடிப்பதனாலோ அல்லது விராண்டுவதனாலோ இந்த நுண்ணுயிர் மனிதனுடைய தோலைத்தாண்டி உள்ளே போய்விடும். நோயெதிர்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு பாதிப்பு ரொம்ப அதிகமாக இருக்கும். அதனால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பூனை மாதிரியே நாய் வளர்க்கின்றவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மனிதர்களுக்கு வயிற்று உபாதைகளை உண்டாக்கின்ற பக்றீரியாக்கள் சில உண்டு. (Sarmonella, Camphylo bactor) இதெல்லாம் பூனைகளிடமிருந்தும் நாய்களிடமிருந்தும் தான் நமக்கு வந்து சேரும்.

சிறுநீரகத்தையும் ஈரலையும் பாதிக்கக்கூடிய நுண்ணுயிர் ஒன்று உண்டு. லெப்டோஸ் பைராஸிஸ் (Leptospirosis) என்று பெயர். இது நாய்களிடமிருந்து தான் மனிதனுக்கு வந்து சேரும்.

ஒருத்தருக்கு ரொம்ப நாளாக தொண்டையிலே தொந்தரவு (Strep throat). அவர் டாக்டரிடம் போனார். சோதித்துப் பாருங்கள் வைத்தியர் என்றார். டாக்டர் பார்த்தார். சோதிக்க வேண்டியது உங்களையல்ல, உங்கள் நாயை என்றார்.

என்ன டாக்டர் இப்படிச் சொல்கிறீர்களே என்றார். ஆமாம், உங்களுக்கு வந்திருக்கின்ற இந்த இடைஞ்சலுக்கு உங்கள் வீட்டு நாய் தான் காரணமாக இருக்க வேண்டும் என்றார். அதேமாதிரி சோதனை செய்தார். அவர்கள் வீட்டு நாய் உடம்பிலே ஸ்ட்ரெப்டோகாக்கஸ் (Streptococcus) என்கின்ற நுண்ணுயிர் இருந்தது.

அதனாலே வீட்டில் செல்லப் பிராணிகளை வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் அறிவுபூர்வமாக அவற்றை வளர்க்க வேண்டும். அறிவுபூர்வமாக அவற்றிடம் பழக வேண்டும். அதுதான் நமக்குப் பாதுகாப்பு.

ஒரு அம்மா என்னிடம் சொன்னார்... நீங்கள் சொல்கிறதெல்லாம் சரிதான் சேர்.

எங்கள் வீட்டிலே செல்லமாக ஒரு நாய்க்குட்டி வளர்க்கின்றோம். அதனுடன் எங்கள் வீட்டுக்காரர் சின்னப்பிள்ளை மாதிரி விளையாடிக் கொண்டிருப்பார். அந்தச் சமயத்திலே எல்லாம் நான் ரொம்ப சர்வஜாகிரதையா அவர்களையே கவனித்துக் கொண்டிருப்பேன் என்றார். ஏன் அப்படி? நாய்க்குட்டி உங்கள் வீட்டுக்காரரை தவறுதலாகக் கடித்துவிடக் கூடாது என்பதற்காகவா? என்றேன். அதுக்காக இல்லை சேர்... இவர் அந்த நாய்க்குட்டியை கடித்துவிடக் கூடாது என்பதற்காக என்றார்.



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் அழகிய பெண்ணும்



ஒரு காலத்தில்நைஜீரிய தேசத்தை ஓர் அரசன் மிகுந்த ஆளுமையுடன் ஆண்டு வந்தான்.

குடிமக்கள் மட்டுமல்ல, விலங்குகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். அவனுக்கு எச்பன்யான்என்ற மகன் இருந்தான்.

அவன் ஒரு நிலையில்லாத சிந்தனையுள்ளவன். அவனுக்கு நிறைய மனைவிகள் இருந்தும் யாரையும் விரும்பாமலும் நேசிக்காமலும் இருந்தான்.

அதனால் மன்னன், மகனின்கண்ணில்படும் அழகான பெண்களையெல்லாம் அவனுக்கு மனைவியாக்கி வைத்தான்.

பெண்ணின் தாயோ, தந்தையோ சம்மதிக்கவில்லையென்றால் அவர்களைக் கொன்றுவிடும் துர்க்குணம் கொண்டிருந்தான்.

அந்நாட்டில் மிகவும் புத்திசாலியான ஆமை ஒன்று இருந்தது. அந்த ஆமையின் மனைவியும், மகளும் மிகவும் அழகானவர்கள்.

மகள், இளவரசன்கண்ணில் பட்டுவிடாமல் இருக்க ஆமை, அவளைப் புதர்களில் ஒளிந்து இருக்க வைத்தது.

ஒருநாள்அந்த ஆமை, உணவுக்காக தனது வயலில் வேலை செய்வதற்காகத் தன் மனைவியுடன் சென்றிருந்தது. அந்த நேரத்தில் பறவைகளை வேட்டையாடிக் கொண்டிருந்த இளவரசன் ஒரு பறவையை நோக்கி அம்பைத் தொடுத்தான்.

அந்தப் பறவை பொத்தென்று புதர் அருகில் விழுந்தது. ஆமையின் மகள் அதைப் பார்த்து கலக்கம் அடைந்தாள்.

பறவையோ அவளின் அதீத அழகை ரசித்தபடி இருந்தது. அதை அவள் எடுத்து அன்புடன் தடவிக்கொண்டிருந்தாள்.

அப்போது பறவையைத் தேடி புதரின் அருகில் வந்த படைவீரன்ஒருவன், அழகின் உருவமாக இருந்த ஆமைப் பெண்ணைப் பார்த்து வியந்து போனான்.

(தொடரும்)

# மகாபாரதம்

207



அது கண்டுபயந்தது ஆழ்ந்த சிந்தனையுள்ள மீன். மற்ற இரண்டு மீன்களை நோக்கி “ஆபத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க விரைந்து கால்வாய்வழியே வேறிடம் சென்றிடுவோம்” என்றது.

மந்த புத்தியுள்ள மீன் “இங்கேயே இருக்கலாம்” என்றது. சமயோசித புத்தி மீன் “சமயம் வரும்போது ஏதாவது யுக்தியைக் கண்டு பிடித்துத் தப்பித்துக் கொள்ளலாம்.

இப்போது போக வேண்டாம்” என்றது. இதைக் கேட்ட ஆழ்ந்த சிந்தனை மீன் கால்வாய் வழியே வெளியேறி ஆழமான குளத்தைச் சேர்ந்தது.

தண்ணீர் வடிந்ததும் குட்டையை கலக்கி வலைஞர்கள் மீன் பிடிக்கத் தொடங்கினர். அப்போது மந்த புத்தி மீன் மற்ற மீன்களுடன் வலையில் சிக்கியது. வலை கயிறுகளால் கட்டப்பட்டுத் தூக்கப்படும் போது சமயோசித புத்தியுள்ள மீன் கயிற்றை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தது.

எடுத்துச்சென்று வேறு குட்டையில் கழுவும் போது அந்த மீன் விரைந்து தண்ணீருக்குள்நுழைந்து தப்பித்துக் கொண்டது. மந்தபுத்தியுள்ள மீன் வலையில் சிக்கி இறந்தது.

இதுபோல சமயோசித புத்தியில்லாதவன் மந்த புத்தியுடைய மீனைப்போல சீக்கிரம் அழிவான்.

வருமுன்னர்தன்னைக் காத்துக் கொள்ளாவிடினும் சந்தேகமான தயக்க நிலையில் சமயோசித புத்தியுள்ளவன் தன்னைக் காத்துக் கொள்வான்.

இதனால், வர இருக்கும் ஆபத்தை முன்னரே அறிந்து கொள்பவனும் சமயோசித புத்தியுள்ளவனும் மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பெறுவர் என்பதும் மந்த புத்தியுள்ளவன் அழிவான் என்று உணர்த்தப்பட்டது.

**பூனை..எலி கதை**

தருமர் பீஷ்மரை நோக்கி.. “நண்பர், பகைவரிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும்?” எனக் கேட்க பீஷ்மர் உரைக்கிறார்தருமா... ஆபத்துக் காலத்தில் எப்படி தப்பிப்பது என சொல்கிறேன்கேள்.

(தொடரும்)

சிபியின் கதை தன் சரீரத்தைத் தந்தேனும் சரணமடைந்தவரைக் காக்கவேண்டும் என்றகருத்தைத் தெரிக்கின்றது.

– வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருமுறைக்குத் திருச்சிற்றம்பலம் போல இந்தியாவுக்கு 13ஆவது அரசியலமைப்பு

தேவாரத் திருமுறையைப் பாராயணம் செய்வதற்கு முன்னதாக திருச்சிற்றம்பலம் என்றுரைப்பது முக்கியமானது.

இவ்வாறு திருச்சிற்றம்பலம் என்றுரைப்பதன் காரணம் என்னவென்று கூறத் தலைப்படுவது இவ்விடத்துக்கு உகந்ததன்று என்பதால், அதுபற்றி இங்கு விளக்க விரும்பவில்லை.

மாறாக, தேவாரத் திருமுறையை எந்தத் தேசத்தில் பாராயணம் செய்வதாக இருந்தாலும் திருச்சிற்றம்பலத்துடன் ஆரம்பித்து திருச்சிற்றம்பலத்துடன் நிறைவு செய்ய வேண்டுமென்பது இறை நியதி.

இவை ஒருபுறமிருக்க, ஈழத் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் தமிழ் அரசியல் தரப்புகளின் கொழுகொம்பு இந்தியாவாகவே இருக்கிறது.

அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டாலும் பரவாயில்லை.

ஆனால், இந்தியப் பிரதிநிதிகள் இடையிடையே இலங்கைக்கு வந்து தங்களைச் சந்தித்துச் சென்றால் அதுபோதும்.

அவ்வாறு இந்தியத் தரப்பு வந்துபோனால், தமிழர் பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்தும் பொருட்டு இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள் என வலியுறுத்தியுள்ளோம்.

தங்களை நம்புமாறு இந்தியா எங்களிடம் கூறியுள்ளது. இந்தியாவுக்கு வாருங்கள் என்று எங்களை அவர்கள் அழைத்துள்ளனர் என்பதாக ஸ்ரீமான் சம்பந்தப் பெருமானின் ஊடக அறிக்கை வெளிவரும்.

அது சரி, எப்போது இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திப்பீர்கள் என ஊடகவியலாளர் யாரேனும் கேள்வி எழுப்பினால், வழமை பிசகாமல் தன் சுட்டுவிரலைக் காட்டி; அதுபற்றி நாங்கள் ஆலோசித்து வருகின்றோம்.

எமது பங்காளிக் கட்சிகளுடன் அதுபற்றிக் கலந்துரையாடவுள்ளோம். எதற்கும் பொறுத்திருப்போம் என சம்பந்தர் ஐயா பதிலளிப்பார்.

இஃது ஒழுங்கு பிசகாமல் கடைப்பிடிக்கப்படும்.

அதேவேளை, இலங்கைக்கு வருகைதந்து அரச தரப்புடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் சந்திப்புக்களை நடத்துகின்ற இந்திய அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், தூதுவர்கள் என்போரிடமும் ஒரு வழமை உண்டு.

அந்த வழமை, 13ஆவது அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளோம் என்பதாக அமையும்.

ஆ! கடவுளே! எத்தனை காலம்தான் இப்படியான திருகுதாளங்கள் தொடருமோ யாரறிவார் அச்சோவே.

## பொலிஸார் இருவர் உட்பட தென்மராட்சிப் பகுதியில் 11 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

தென் மராட்சியில் இரு பொலிஸார் உட்பட மேலும் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மூலம் குறித்த தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

அவர்களில் 8 பேர் அன்டிஜன் பரிசோதனை ஊடாகவும் 3 பேர் பிசிஆர் பரிசோதனை ஊடாகவும் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் இருவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் என்று தெரியவந்துள்ளது.

(ம-3)

## 2022 பட்ஜெட்; நவம்பர் 12 சமர்ப்பிப்பு

### டிசெம்பர் 10 வாக்கெடுப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் நவம்பர் 12ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும்.

அதற்கான நிதியொதுக்கீட்டு சட்டமூலம் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு- செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 10ஆம் திகதி நடத்தப்படும்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே மேற்கண்ட தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார். (ம-3)

## நவராத்திரி பாமாலை



படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போல் கையும் துடி இடையும்
அல்லும் பகலும் அனைவரும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத்தில் இருப்பாள்

உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தேன்
ஓதும் வேதத்தில் உள் நின்றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும் கருணை
வாசகத்துள் உட்பொருளாவாள்

ஓதகன்ற தொழிலுடையதாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்துள் எழிலுடையுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள்

நிலானி நிக்சன்
யா/வட்டு மத்திய கல்லூரி

**அன்பு மாணவச் செல்வங்களே!**
**நவராத்திரி பாமாலையில் உங்கள் கவிதைகள் இடம்பெற வேண்டும் எனின் உங்கள் கவிதைகளுடன் முழுப்பெயர், பாடசாலையின் பெயர், தரம் என்பவற்றை இட்டு**

**076 636 3378**

**என்ற வைபர் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

## மருத்துவக் குறிப்பு

எலுமிச்சம்பழச்சாற்றை தேய்த்துவந்தாலே சில நாட்களில் உள்ளங்கை சொரசொரப்பு நீங்கி மிருதுவாக்கி விடும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கல்வயல், சந்திரபுரம், கெருடாவில், மட்டுவில், மட்டுவில் இராணுவ முகாம், மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, கொழும்புத்துறை, மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** புத்தடி, தொட்டியடி, கனகராயன்குளம் 56 ஆம் பயிற்சி இராணுவ முகாம், இ்கோன்-மாங்குளம், ஆலங்குளம், குஞ்சுக்குளம், மன்னங்குளம், முதிரங்குளம், பெரியகுளம் 561 பிரிகேட் இராணுவ முகாம், பெரியகுளம்- சேவாலங்கா, பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையத்தடி, கனகராயன்குளம், விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், மாங்குளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம் ஆகிய இடத்திலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம், மன்னார் மருத்துவமனை, மன்னார் நீர்வழங்கல் சபை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கடற்படை முகாம், ஒலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக் கம்பனி பிறை வேட் லிமிட்டட் (கடல் உணவுக் களஞ்சியம்) பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ்- தலை மன்னார் பல்மெய்ரா ஹவுஸ், தப்ர பேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நீர்வழங் கல்- தோட்டக்காடு, இளைஞர் படை பயிற்சி மையம் கார்கி ல்ஸ் பூட்சிட்டி, மன்னார், இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார், தள்ளாடி டயலொக், நடுக்குடா, பேசாலை- ஐஸ் தொழிற்சாலை, கொன்வென்ட் வீதி, எழுத்தூர், எமில்நகர், எருக்கலம்பிட்டி, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி 4 ஆவது மைல்கல், ஜோசப்வாஸ் நகர், கடலேரி வீதி, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, மன்னார் நகரம், மூர்வீதி, முள்ளிப்பள்ளம், நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), ரைமக்ஸ் ஆடையகம் அருகில், இளையோர்சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஓல்லிமோட்டை, படப்பாடி நீர்வழங்கல், பள்ளிமுனை, பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட் டம், புதுக்குடியிருப்பு, புகையிரத நிலையம்- சாந்திபுரம், சிலாவத்தை முகாம் சந்தி, சிறுநாவற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவமுகாம், மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்ரியன் தேவாலயம், சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தரவன்கொட்டு, தோட்டவெளி, துள்ளு குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், மன்னார் யுசி மைதானம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (4-5)

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

12



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

தலிபானின் எழுச்சிக்கு காரணம் முகாஜிதீன்குழுக்கள் மொத்த அதிகாரத்தையும் தாம் பெற்று விட வேண்டும் என்று போட்டியிட்டதன் காரணமாக அந்த இடைக்கால அரசாங்கம் ஆரம்பத்திலேயே முடங்கியதாகும். மேலும் பல பெரிய முகாஜிதீன் குழுக்கள் காபூலில் அதிகாரத்திற்காக ஒருவருக்கொருவர் சண்டையிடத் தொடங்கியதும் ஒரு காரணமாகும்.

### முல்லா முகமது ஒமர் முஜாஹித் (முகமது உமர் 1994-2013)

தலிபானை தோற்றுவித்தவர் முல்லா முகமது ஒமர்முஜாஹித் (அல்லது முகமது உமர்) ஆவார். இவர் ஆப்கானிஸ்தானின் கந்தகார் நகருக்கு அருகே ஒரு கிராமத்தில் பிறந்தவர். எந்த அரசியல் தொடர்புகளும் இல்லாத வறுமை யான குடும்பம். முகமது உமருக்கு 3 வயது இருக்கும் போது தந்தை இறந்துவிட்டார். உறவினர்கள் அவரை வளர்த்தார்கள். அவரது உறவினர் ஒருவர் மதரசா ஒன்றில் போதகராக இருந்தார்.



தலிபான் நிறுவனர் முல்லா முகமது ஒமர் 1994-2015

அவரைப் பார்த்து மதக்கல்வியில் ஒமருக்கு (உமருக்கு) ஈடுபாடு வந்தது. பாகிஸ்தானுக்குச் சென்று ஒரு மதரஸாவில் படித்தார். படிப்பை முடித்துவிட்டு கந்தகார் வந்து ஒரு குடிசையில் மதரஸா ஒன்றைத் தொடங்கினார். அதன் பின் பாகிஸ்தானின் குவெட்டா மாகாணத்தில் ஒரு மதரஸாவில் பணிபுரிந்தார். 1980களில் சோவியத் யூனியன் மற்றும் பொதுவுடைமைவாத ஆப்கானிஸ்தான் மக்கள் குடியரசுக்கு எதிராக ஆப்கான் முகாஜிதீனில் இவர் இணைந்தார்.

1994 இல் இவர் தலிபானை தோற்றுவித்தார். தலிபான்கள் இவரை நம்பிக்கைக்குரியவர்களின் தளபதி அல்லது முஸ்லிம்களின் உயர்ந்த தலைவர் என அங்கீகரித்திருந்தனர். 1995 ஆம் ஆண்டில் பெரும்பாலான தெற்கு ஆப்கானிஸ்தானை கைப்பற்றினார். 1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் தலிபான்கள் நாட்டின் தலைநகரான காபூலை கைப்பற்றினர். 1996 முதல் 2001 வரை தலிபான் ஆட்சி பதவியிலிருக்கும் பொழுது இவர் ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைவராக இருந்தார்.

இவர் ஆப்கானிஸ்தானின் தலைவராக பதவி வகித்த பொழுது எப்போதாவது தான் கந்தகார் நகரை விட்டு வெளியே செல்வார். வெளியாட்களையும் இவர் எப்போதாவது தான் சந்தித்துள்ளார். இவர் மிகவும் சிறிய அளவே பேசக்கூடியவர். கடுமையான வாழ்க்கைச் சூழ் நிலைகளில் வாழும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். செப்டெம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு ஒசாமா பின்லேடன் மற்றும் அல்கொய்தா தீவிர வாதிகளுக்கு புகலிடம் அளித்ததாக கூறப்பட்ட குற்றச்சாட்டின் காரணமாக ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தால் தேடப்பட்டார். இவர் அமெரிக்கர்கள் ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்த போது தப்பினார்.

**தலிபானை தோற்றுவித்தவர் முல்லா முகமது ஒமர் முஜாஹித் (அல்லது முகமது உமர்) ஆவார். 1980களில் சோவியத் யூனியன் மற்றும் பொதுவுடைமைவாத ஆப்கானிஸ்தான் மக்கள் குடியரசுக்கு எதிராக ஆப்கான் முகாஜிதீனில் இவர் இணைந்தார். முகாஜிதீன் குழுக்கள் அதிகாரத்தைப் பெற்றதும் அவர்களுக்கிடையே போட்டி ஏற்பட்டுவிட்டது. இப் போட்டியின் காரணமாக புதிய குழுவான தலிபான் எழுச்சி அடைந்தது. பஷ்துன், தாஜிக், உஸ்பெக் என ஆப்கானின் முக்கிய இனங்கள் மூன்றையும் "இஸ்லாம்" என்ற ஒற்றை அடையாளத்தால் இணைத்தார் முகமது உமர். தலிபான்படையில் இந்த மூன்று இனத்தினரும் இருந்தார்கள். 1996 முதல் 2001 வரை தலிபான் ஆட்சி பதவியிலிருக்கும் பொழுது இவர் ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைவராக இருந்தார். தலிபான்களின் அரசாங்கம் அதிகாரபூர்வமாக பாகிஸ்தான், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸால் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டது.**

பிறகு நேட்டோ தலைமையிலான சர்வதேச படைகள் மற்றும் புதிய ஆப்கானிஸ்தான் அரசாங்கத்திற்கு எதிரான தலிபான் கிளர்ச்சியை இயக்கினார். 2012 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி, ஒபாமாவிற்கு இவர் எழுதியதாகக் கூறப்படும் கடிதத்தில் அமைதியை விரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உடல் நலக்குறைவால் 2013 ஏப்ரலில் இறந்தார் என 2015 ஆம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்டது.

### தலிபான்களின் கதை

ரஷ்யப் படைகளுடன் போரிட்ட குழுக்களை முஜாகிதீன்கள் என்பார்கள். இதுபற்றி முன்னர் பார்த்தோம். ஒவ்வொரு முகாஜிதீன் குழுவுக்கும் ஒரு தலைவர் இருப்பார். ஆப்கானின் ஏதாவது ஒரு பகுதி இவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். வறுமையே வாழ்க்கையாகிப் போன ஆப்கானில் முகாஜிதீன்கள் வளமாக இருந்தார்கள்.

எந்த நிமிடத்திலும் போரில் மரணம் நிச்சயம் என்றாலும், அதிகாரமும் வசதிகளும் அவர்களுக்குக் கிடைத்தன. அதனால் நிறைய இளைஞர்கள் ஈர்க்கப்பட்டு முகாஜிதீன் குழுக்களில் இணைந்தார்கள். மத அடிப்படைவாதமும் இராணுவ பயங்கரவாதமும் இணைந்த மனிதர்களாக இவர்கள் வளர்ந்தார்கள்.

குவெட்டாவில் பார்த்துக் கொண்டிருந்த மதரஸா வேலையை உதறிவிட்டு, இப்படி ஒரு முகாஜிதீன் குழுவில் இணைந்து போரிட்டார் முகமது உமர். அபாரமான போர்த்திறமையும் துணிச்சலும் அவருக்கு இருந்ததாக தலிபான்கள் சொல்கிறார்கள். வெகு தூரத்திலிருந்து குறிபார்த்து ரஷ்ய இராணுவ தாங்கிகளை சிதறடிப்பது அவரின் பலம். போர்க்களத்தில் நான்கு முறை தாக்குதல்களிலிருந்து நூலிழையில் உயிர்தப்பியிருக்கிறார் அவர். அப்படி ஒரு தாக்குதலில் அவரின் வலது கண் பார்வை பறிபோனது.

1989 ஆம் ஆண்டு சோவியத் படைகள் ஆப்கானிலிருந்து வெளியேறின. ஆப்கான்தலைவர்கள் பலரையும் இணைத்து இடைக்கால அரசு ஒன்றை உலக நாடுகள் உருவாக்கின. ஆனால், களத்தில் சோவியத் படைகளுடன் சண்டையிட்ட முகாஜிதீன்கள் இதை ஏற்கவில்லை. பஷ்துன், தாஜிக், உஸ்பெக்ஆகிய மூன்று இனங்களின் முகாஜிதீன்களும் தங்களுக்குள் மோதிக் கொண்டார்கள்.

பாகிஸ்தான், சவுதி அரேபியா, ஈரான் நாடுகள் இந்தக் குழுக்களுக்கு ஆயுதங்களும் பணமும் கொடுத்து ஆப்கானில் அமைதி வராமல் பார்த்துக் கொண்டன. இவர்களின் மோதலில் தலைநகர் காபூலில் பாதி அழிந்தது. அரசு இல்லை, பொலிஸ் இல்லை, நீதிமன்றம் இல்லை. முகாஜிதீன்கள் வைத்ததுதான் சட்டம். கொலைகள், கொள்ளைகள், மிரட்டிப் பணம் பறிப்பது, பாலியல் குற்றங்கள் என நிம்மதியைத் தொலைத்தனர் மக்கள்.

பல இலட்சம் மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்குச் சென்றனர். முடிவில்லாமல் நீடித்த இந்தப் போரில் தன் கை ஓங்குவதற்கு என்ன வழி என்று பாகிஸ்தான் உளவுத்துறை யோசித்தது. எல்லா இனக் குழுக்களையும் இணைக்கும் வலுவான ஒரு தலைவர் தேவை என்பதை உணர்ந்தது. அவர்கள் தேர்வு செய்த நபர், முகமது உமர் (முல்லா முகமது ஒமர்). 1994 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கந்தஹாரில் வெறும் 50 பேருடன் தலிபான் அமைப்பைத் தொடங்கினார் அவர். "தலிப்" என்ற அரபு வார்த்தைக்கு "மாணவன்" என்று அர்த்தம். தலிபான்கள் என்றால் "மாணவர்கள்".

பஷ்துன், தாஜிக், உஸ்பெக் என ஆப்கானின் முக்கிய இனங்கள் மூன்றையும் "இஸ்லாம்" என்ற ஒற்றை அடையாளத்தால் இணைத்தார் முகமது உமர். தலிபான் படையில் இந்த மூன்று இனத்தினரும் இருந்தார்கள். மற்ற முகாஜிதீன் குழுக்களிலிருந்து இது தான் அவர்களை வித்தியாசப்படுத்தியது. இஸ்லாமிய சட்டப்படியான அரசை ஆப்கானில் உருவாக்க வேண்டும் என்ற முகமது உமரின் முழக்கம் இவர்களை இணைத்தது. பாகிஸ்தான் பயிற்சி அளித்து உருவாக்கிய 15 ஆயிரம் பேர் கொண்ட படையுடன் இவர்கள் ஆப்கானில் முன்னேறினர். பாகிஸ்தான் இராணுவத்தினரும் கூடப் போனார்கள். பாகிஸ்தான் விமானப் படை விமானங்கள் வான் வெளியிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தன.

இதனால் எதிர்த்துப் போர் புரியவே பயந்து முகாஜிதீன்கள் சரணடைந்தார்கள். மூன்றே மாதங்களில் கந்தகார் விழுந்தது. அது, தலிபான்களின் முதல் வெற்றி. அடுத்தடுத்து பல மாகாணங்களை வென்று முன்னேறியது அந்தப் படை. தாங்கள் வென்ற இடங்களில் அரசு அதிகாரிகள் மற்றும் முஜாகிதீன்கள் செய்த ஊழலை ஒழித்து, மக்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்தது தலிபான் படை.

(தொடரும்.)

## 44 பேர்...

இதுவரையில் கொரோனாவால் உயிரிழுந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 229 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## புலமைப்பரிசில்...

கல்விச் சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

இரண்டு பரீட்சைகளும் ஒதுக்கப்பட்ட புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னதாக தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையை நவம்பர் மாதம் 14ஆம் திகதியும் உயர்தர பரீட்சைகளை நவம்பர் 15 முதல் டிசம்பர் 10 வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழில்...

பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் 19 வயதுடைய இளம் பெண் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனிவான் வீதி, சுழிபுரம் என்ற பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளம் பெண்ணே உயிரிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.
















அதேபோல, உயிரிழந்த நிலையில் அடையாளப்படுத்தப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட ஆண் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## திங்கள் முதல்...

துறைமுகத்தில் உள்ள பால்மா இருப்பை விநியோகிக்க முடியும் எனப் பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உரிய வங்கிகளுக்கு டொலர் ஒதுக்கம் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் பால்மா இருப்பை விநியோகிக்க முடியும் என இறக்குமதியாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3)

## 13ஆவது திருத்த...

ஒப்பந்தத்திற்கு அமைய 13ஆம் திருத்த சட்டத்தையும் நடைமுறைப்படுத்துவீர்களா? என எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் நேரத்தில் அமைச்சர் உதய கம்மன்பில வலுசக்தி அமைச்சின் கேள்விகளுக்கு பதில் கூறிக்கொண்டு இருந்த வேளையில், ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல,

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்கு நாம் நிரந்தரமாக கொடுத்து விட்டதாக சபையில் நீங்கள் கூறினீர்கள்.

நீங்கள் தப்பிப்பதற்காக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை பயன்படுத்திக் கொண்டீர்கள். அப்படியென்றால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு அமைய 13 ஆம் திருத்த சட்டத்தையும் அதேபோன்று நடைமுறைப்படுத்துவீர்களா? என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் தெரிவித்த அமைச்சர் உதய கம்மன்பில,

கிரியெல்ல எம்.பியின் வயது காரணமாக அவருக்கு சரியாக நான் கூறியது விளங்கவில்லைபோல். 2003ஆம் ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதி அவர்கள் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் அடிப்படையில்தான் கைமாற்றப்பட்டது எனக் கூறி அந்த உடன்படிக்கையை சபைப் படுத்தியுள்ளேன் என்றார்.

லக்ஷ்மன் கிரி யெல்ல,இவருக்கு எந்த நாளும் எனது வயது உறுத்துகின்றது, ஆனால் உங்களின் பிரதமரை விட நான் இளையவன் என் றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய சமிந்த விஜயசிறி,

இந்த விவகாரத்துடன் தொடர்புபட்ட நபரான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று சபையில் இந்த விடயங்கள் விவாதிக்கப்பட்ட வேளையில் சபையில் இருந்தார். இந்த கேள்விகளுக்கு இல்லை என பதில் கூறியிருந்தால் அரசாங்கம் நெருக்கடியில் விழுந்திருக்கும், ஆம் என்ற பதிலை கூறியிருந்தால் அவரது அரசியல் வாழ்க்கை முடிந்திருக்கும்.

ஆகவே அவர் தெளிவான பதிலை கூறாத காரணத்தினால் இன்றும் முரண்பாடுகள் எழுந்துள்ளன, எனவே அவர் முதலில் பதில் தெரிவிக்க வேண்டும் என்றார். (ம-3)

## அனைத்து தடை...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய பொதுமைப்படுத்தலின்கீழ் பொருளாதாரத்தை வழிநடத்துவதற்கு, அரச சேவையின் செயற்றிறன் மிகமுக்கிய காரணியாகிறது. அதனால், எதிர்வரும் காலங்களில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, முழு அரச இயந்திரமும் அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் செயற்பட வேண்டும். இதில், மாவட்ட அரச அதிபர்களுக்கு மிகப்பெரிய பங்கு காணப்படுகிறது என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பொருத்தமற்ற சுற்றுநிரூபங்கள் மற்றும் கட்டளைகள் - சட்டங்கள் என்பன, இந்த இலக்குகளை அடைவதற்குள்ள தற்காலத் தடைகளாகக் காணப்படுகின்றன என்று அரச அதிபர்கள் எடுத்துரைத்தனர்.

தற்போதைய நிலைமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி, அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய புதியதொரு தொடக்கத்துக்கு செல்வதற்குள்ள தடைகளைத் தகர்க்கத் தான் தயாரென்றும் கூறினார். (ம-3)

## வடக்கு மாகாண...

எப்பட்டுள்ளபோதிலும் பதவி ஏற்பு எப்போது என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை.

ஏற்கெனவே வடக்கு மாகாண ஆளுநர் நியமனம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,தற்போதைய வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம். சாள்ஸிடம் இது தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தொடர்ந்தும் தானே பதவியில் இருப்பதாகவும் இது தொடர்பிலான எந்தத் தகவலும் தனக்குத் தெரியாது என்றும் தெரிவித்துள்ளார். (ம-3,33)

## கட்டு...

இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், முறையற்ற விதத்தில் பொருட்களுக்கான விலையை அதிகரிக்க அனுமதிக்க வேண்டாம் என ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## +772...

சின் தொற்று நோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 523, 550 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## மக்களின் செயற்...

களை மறந்து செயற்படுவதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அண்மைய சில தினங்களாக மக்களின் நடவடிக்கைகள் மிகவும் மோசமானதாகவும், அதிருப்தி அளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடங்களுக்குச் செல்லும்போதும் பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும்போதும் மக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)


## வவுனியாவில்...


சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் தாமாக முன்வந்து பரிசோதனை செய்தவர்களின் பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 24 பேருக்கு மேலும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், கோவிட் தொற்று காரணமாக வவுனியாவில் நேற்று செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவர் மரணமடைந்துள்ளார். (ம-3,250)












### வரணி மாசேரிப் பகுதியில்

# வீதியில் பயணித்த பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி-மாசேரிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை வீதியால் துவிச்சக்கரவண்டியில் பயணித்த பெண்ணின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான ஒன்றரைப் பவுண் சங்கிலியே இவ்வாறு வீதியால் பயணித்த பெண்ணை தள்ளி விழுத்தி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது. (ம-03,30)

# மன்னாரில் உடைக்கப்பட்ட 100 வருடம் பழமையான பிள்ளையார் மீள் பிரதிஷ்டை

## சிலாவத்துறை விகாராதிபதியும் பங்கேற்பு

(மன்னார் )

மன்னார் முசலியில் கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வீற்றிருந்து அருள்பாலித்து கடந்த 10 மாதங்களிற்கு முன் விசமிகளால் உடைத்து எறியப்பட்ட "பாசித் தென்றல் குளத்தடி பாலை மரத்தடிப் பிள்ளையார்" நேற்று உருத்திர சேனையால் ஊர் மக்களின் ஆதரவுடன் மீள்பிரதிஷ்டை செய்யப்பட்டார். குறித்த நிகழ்வில் சிலாவத்துறை விகாராதிபதி அவர்களும் விருப்பத்துடன் பங்குபற்றியிருந்தார்.





குறித்த பிள்ளையார் பன்னெடுங்காலமாக முசலி 32 ஆம் கட்டையில் பாலைமர நிழலில் வீற்றிருந்து பின்பு வீதி புனரமைப்பின்போது வீதியில் இருந்து சற்று பின்னால் பீடம் கட்டி வைக்கப்பட்டு மக்களால் வழிபடப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. குறித்த பிள்ளையார் காணாமல் ஆக்கப்பட்ட பின்னர் மக்கள் அந்த பீடத்தில் பிள்ளையார் படம் வைத்து வணங்கி வந்த நிலையில் நேற்று கருங்கல்லினால் ஆன பிள்ளையார் திருவுருவம் மீள்பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. (ம-03)

# சிறையில் ரிஷாத் போத்தலிலே சிறுநீர் கழிக்கின்றார்

## சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சிறை அறை மாலை 5 மணிக்கு மூடப்படுகின்றது. இதனால் அவருக்கு போத்தலில் சிறுநீர் கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கட்சி பேதங்களுக்கு அப்பால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆளுங்கட்சி எம்.பிக்களும் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகளில் இருந்து உணவுகள் கொண்டு வரப்படுகின்றன.

அரசியல் ரீதியாக வழக்கு தொடர்ந்தால் இதுவே நடக்கும். பொலிஸார் அரசாங்கத்தின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுகின்றனர் என்றார். (ம-03)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் - காரைநகர் வீதியில் ஓட்டுமடம் சந்தியில் இருந்து 500m தூரத்தில் 20 அடிப் பாதையுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

இரண்டு பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

( யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2Km தூரம் )

076 221 2037, 077 288 0152, 076 734 1023

**அமெரிக்க லொத்தர் விசா**

2023ல் நீங்களும் அமெரிக்காவில்...

விரையுங்கள் பதிவுகள் ஆரம்பாகிவிட்டன 0768226244

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

0768226240 DHL

**கனடாவில் உடனடி வேலைவாய்ப்பு**

- Breakfast Attendant
- Office Admin
- Front Desk Agent
- Night Auditor
- Room Attendant
- Pool Attendant
- Housekeeping Supervisor
- Maintenance Worker
- Front Desk/Food Service Attendant
- Guest Service Manager

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE



Hotel Management சம்பந்தமான அனுபவம் / கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49/4, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

0777-068-777

**வேலை வாய்ப்பு**

நெல்லியடியில் இயங்கும் இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தில் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து நிற்கும் இளைஞர், யுவதிகள்.
- ஓய்வூதியம் பெற்று இருப்பவர்கள்.
- பகுதி நேரம் வேலை செய்ய ஆர்வம் உள்ளவர்கள்.
- இல்லத்தரசிகள்.

உங்களுக்கான தொழில் வாய்ப்பு இதோ!

தேவைப்படும் பதவி வெற்றிடங்கள்

- Agency Cluster manager
- Team manager
- Financial Planner

076 879 2992

**DCM - யாழ். நகர்**

( வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை )

A/L 2023 கலை, வர்த்தக புதிய பிரிவு

நாளை - 09.10.2021

சனி - 9.00 ZOOM ஊடாக

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

077 011 9434 நிர்வாகம்

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

( நிலப்பரப்பு - 14 அடி பாதையுடன் )

பரப்பு 6 இலட்சம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

( தரகர் தேவையில்லை. )

077 814 7389 | 077 614 7333

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**மனவளக்கலை யோகப் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் முழுமைநல வாழ்விற்கான எளியமுறை குண்டலினி யோகப் பயிற்சிகளாகிய

- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கு : எளியமுறை உடற்பயிற்சிகள்
- மனஅழுத்தம் குறைய : எளியமுறை தியானப் பயிற்சிகள்
- உயிர்ச்சக்தியை அதிகரிப்பதற்கு : காயகல்பப் பயிற்சிகள்

போன்றவை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்க இருக்கின்றன. எனவே அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : 09.10.2021 (சனிக்கிழமை)

நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரைக்கும்

பயிற்சிகளை வழங்குபவர் : துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் அவர்கள்

குறிப்பு : பயிற்சியானது கொவிட் - 19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக நடைபெறும்.

தொடர்புகளிற்கு : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

இல. 81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Congratulations!

நேற்று (07.10.2021) யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி பட்டம் பெற்ற எங்கள் பாடசாலை அதிபர்

சூ. திலகதீபன்

அவர்களை உளமார நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற்று வாழ இறைவனின் ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

யா/வறுத்தலைவிளான் அ.மி.த.க. பாடசாலை




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.